# اللغة العربية لدى الناطقين بغيرها

## نموذج للمجتمع السريلانكي

# ARABIC LANGUAGE AMONG THE NON-NATIVE ARAB SPEAKERS

## A Model for Sri Lankan Communities




*Compiled by: Dr. P.M.Hamthoon*




ARABIC LANGUAGE AMONG THE NON-NATIVE ARAB SPEAKERS - DR. P.M.HAMTHOON

سطور عن المؤلف

## الدكتور حمدون فجي محي الدين



الدكتور حمدون فجي محي الدين من كبار المحاضرين في كلية الأداب بجامعة الشرق – سري لانكا ويعمل حاليا كأستاذ متقدم بقسم اللغة العربية في جامعة الشرق- سريلانكا وأكمل الدراسات الإسلامية واللغة العربية في الكلية العربية الشرقية بعطاليشينا في شرق سريلانكا عام 1993م، وحصل على شهادة البكالوريوس المتخصص في اللغة العربية من جامعة بيرادنيا سريلانكا عام 1999م، كما انه أكمل درجة الماجستير فى الحضارة الإسلامية بجامعة بيردانيا بسريلانكا عام 2004م. وحصل ايضا علي شهادة الدكتوراه فى اللغة العربية بالجامعة العثمانية بالهند عام 2012م وعلى شهادة الدبلوم العالي فى مجال التربية فى الجامعة المفتوحة بسريلانكا والدبلوم العالي فى مجال الترجمة فى الجامعة العثمانية باالهند.

وعمل سابقا محاضرا في كل من جامعة بيرادانيا وجامعة جنوب شرق سريلا نكا وقد شارك في عدد من المؤتمرات العالمية والوطنية والتي أجريت في سري لانكا والهند ودبي.وأشرف علي عدد من الرسائل العلمية على مستوى الدكتوراه والعشرات من البحوث المنشورة في الدوريات الجامعية و مجلات الكليات وله دور بارز في تنمية اللغة العربية في سريلانكا وخارجها وجدير بالذكر أنه ما زال يعمل في مراجعة المناهج الدراسية لغة العربية في عدد من المؤسسات التعليمية ونال على عضوية في عدد من المنظمات الوطنية والدولية غير الحكومية للغمل معها في مجال الدراسات العربية. وبحوثه وتاليفاته هي خير دليل وشاهد على ما يقوم شخصيته بنشاطات تعليمية في مجال الدراسات العربية والإسلامية.

الدكتور عبد الرازق عبد المجيد
المحاضر المتقدم بقسم اللغة العربية
جامعة جنوب شرق سريلانكا

9 789553 897220

## المصادروالمراجع


1. محمد صبري شهرير. (2013). مجالات تعليم اللغة العربية، آفاق مستقبلية. قسم النشر بمركز البحوث. كوالالومبور: الجامعة الإسلامية العالمية ماليزيا.
2. عارفين مامت وثريا هارون. (2016). استراتيجيات حديثة في تعليم وتعلم اللغة العربية لغير الناطقين بها. كوالا لمفور: الجامعة الإسلامية العالمية بماليزيا.
3. فهد بن عبد العزيز العسكر. (2012). مجلة العلوم الإنسانية والاجتماعية.عمادة البحث العلمي. العدد الرابع والعشرون. رجب ١٤٣٣ هـ.
4. علي أحمد مدكور، وإيمان أحمد هريدي. (2007). تعليم اللغة العربية لغير الناطقين بها، النظرية والتطبيق. القاهرة: دار الفكر العربي.
5. فايز عيسى المحاسن. (2007). المجلة الأردنية في اللغة العربية وآدابها. المجلد (3) العدد (3). جامعة مؤتة. اردن: عمادة البحث العلمي.




# அல்குர்ஆன் விரிவுரையின் அவசியமும் பயன்பாடும்

ஏ.எல்.எம். முஜாஹித்
துறைத் தலைவர், இஸ்லாமியக் கற்கைகள் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
Email - mujahidm@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

நபி (ஸல்) அவர்கள், நபித்தோழர்கள், தாபியீன்கள் ஆகியோர்கள் அல்குர்ஆன் விரிவுரைக்கு கொடுத்த முக்கி யத்துவமானது அல்குர்ஆன் பற்றிய சந்தேக நிலை சமூகத்திலிருந்து கலையப்படுவதற்கும், அதன் முக்கி யத்துவம் உணரப்படுவதற்கும் அடித்தள மிட்டுள்ளது. இன்றைய நவீன சூழலில் அல்குர்ஆன் விரிவுரையின் அவசியத்தையும் பயன்பாடையும் தெளிவுபடுத்துதல் இவ்வாய்வின் நோக்கமாகும். பண்பு ரீதியான ஆய்வு முறையிலமைந்த இவ்வாய்வு, முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியுள்ளது. இதன்படி இஸ்லாமிய வரலாற்றில் இக்கலையானது நபி (ஸல்) அவர்கள் காலத்திலிருந்து தோற்றம் பெற்றதோடு, அவர்களே முதன்மை முபஸ்ஸிராகவும் காணப்பட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் உயிரோடு இருந்தபோது அல்குர்ஆன் தொடர்பாக ஏற்பட்ட சந்தேகங்களை வஹியின் துணை கொண்டு தெளிவுபடுத்தினார்கள். அவர்களின் மறைவின் பின்னர் அடுத்த தலைமுறையினரான ஸஹாபாக்கள் காலத்தில் பல புதிய பிரச்சினைகள் தலைதூக்கியது. இதனால் அல்குர்ஆனின் புனிதத் தன்மைக்கு முரண்படாத

அமைப்பில் விளக்கங்களை முன்வை த்தார்கள். இவர்களில் முதல் நான்கு கலீபாக்கள், அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி), அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்(ரழி) போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் அனைவரும் அல்குர்ஆன் வசனங்கள் இறங்கிய பின்னணி, அவற்றின் உட்பொருள் என்பன பற்றிய பூரண விளக்கத்தினைப் பெற்றிருந்தனர். ஸஹாபாக்களுக்கு அடுத்து வந்த பரம்பரையினரைப் பொருத்தவரையில், ஸஹாபாக்கள் விளக்கம் கூறாது விட்டுச்சென்ற வசனங்களுக்கு விளக்கவுரைகள் அவசியப்பட்டன. இதற்குப் பங்காற்றியவர்களாக ஸஈத் இப்னு ஜுபைர், முஜாஹித், இக்ரிமா, தாவூஸ், அதா∴. போன்ற தாபிஈ அறிஞர்கள் இக்கலையை வளர்த்தனர். நவீன காலத்தில் தொழில் நுட்ப சாதனங்களின் விருத்தியின் காரணமாக தப்ஸீர் கலை புதிய பரிணாமமெடுத்துள்ளது. சாதாரணமாக, ஒருவரால் தேடியறிந்து கொள்ள சிரமப்படும் பல்துறை சார், பல கலை சார்ந்த தப்ஸீர்களையும் இன்றைய சூழலில் மனிதனுக்கு கணிணியின் வாயிலாக பெற்றுக்கொள்ள முடியும். இருவெட்டுக்கள் மூலமும், வலை பின்னலின் ஊடாகவும் தான் விரும்பும் அல்குர்ஆன் விளக்கவுரைகளை பெற்றுக்கொள்ள வாய்ப்பாக உள்ளது. எனவே, அல்குர்ஆன் பற்றிய சந்தேகங்களை இல்லாதொழிப் பதற்கான முன்னெடுப்புக்கள், அதற்கான வழிகாட்டல்கள் பற்றிய முன்மொழிவுகளைத் தருவதாகவும், எதிர் காலத் தில் இவ்விடயத்தில் ஆய்வை மேற்கொள் வோருக்கு உதவு வதாகவும் இவ்வாய்வு அமைகிறது.



**திறவுச் சொற்கள்:-** அல்குர்ஆன் விரிவுரை, அவசியம், பயன்பாடு

## அறிமுகம்

நபித்தோழர்கள், தாபியீன்கள், மற்றும் அவர்களின் வழிவந்த மாணவர்களிடமும் அல்குர்ஆனுக்கு தவறான கருத்துக்களைக் கூறும் வழிமுறை இருக்கவில்லை. இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு மாற்றமான சிந்தனைப் பிரிவுகள் தோற்றம் பெற்றபோதே அல்குர்ஆனைத் தவறாகப் புரிந்தும், விளங்கியும் விளக்கம் கூறும் நிலைமை உருவானது.

நபியே நீர் அவர்களின் செல்வத்தில் இருந்து ஸகாத்தை எடுப்பீராக, மேலும் அவர்களுக்காகப் பிரார்த்திப்பீராக என்ற அல்குர்ஆனிய வசனத்திற்கு முதலாம் கலீபா அபூபக்ர் (றழி) அவர்களின் ஆட்சியில் ஸகாத்தை தர மறுத்தோர் சுட்டிக்காட்டிய விளக்கத்தையும் உமர் (றழி) அவர்களின் காலத்தில் குதாமா (றழி) அவர்கள் மது அருந்திய பின்னர் தான் குடித்ததற்குரிய ஆதாரம் குர்ஆனில் இருக்கின்றது என்று கூறியதையும், அல்ஹுக்ம் என்ற சொல்லுக்கு கவாரிஜ்கள் தந்த விளக்கத்தையும் இன்னும் பல சான்றுகளையும் இதற்கு உதாரணமாகக் குறிப்பிட முடியும்.

இஸ்லாமிய சிந்தனைக்கு நேர்மாற்றமான குழுக்கள் அல்குர்ஆன் வசனங்களுக்கும் ஹதீஸுக்கும் தமது தவறான சித்தாத்தங்களுக்கு இசைவான பொருள்களைத் தந்தார்களே அன்றி அல்குர்ஆன் வேண்டி நிற்கும் பொருள்களை விளக்கிட முன்வரவில்லை.

ஹிஜ்ரி 14ம் நூற்றாண்டு வரை அறிஞர்களால் எழுதப்பட்ட தப்ஸீர்கள் தவறான சித்தாந்தங்களுக்கு மறுப்புக் கூறும் வகையிலும், துறைகள் சார்ந்த அம்சங்களை விளக்கு வதையும் முன்னிலைப்படுத்தி இருப்பதை அவதானிக்க முடிகின்றது. மொழி, கலைச்சொற்கள், தெளிவில்லாத வசனங்களை விளக்குதல், சட்டங்களை விளக்குதல் போன்ற துறை சார்ந்த அம்சங்கள் அவைகளில் உள்ளடக் கப்பட்டிருந்தன.

அத்தோடு இஸ்லாமிய வரலாற்றில் தோற்றம் பெற்ற வழிகெட்ட சிந்தனைப் பிரிவுகளின் ஆதாரங்களை முறியடிப்பதும் அந்த தப்ஸீர்களில் காணப்பட்ட முக்கிய போக்காகும். அல்குர்ஆனிய வசனங்களை திரித்து தவறாக விளக்கிய மு.ஃ.தஸிலாக்கள், ஜஹ்மிய்யாக்கள், கவாரிஜ் கள், ஷீஆக்கள் மற்றும் சூபிகள் போன்றோரின் தப்ஸீரில் காணப்படும் முரண்பாடுகளை விளக்குவதும் அவற்றிற்கு மறுப்புக் கூறுவதும் ஒரு வழிமுறையாகக் கொள்ளப்பட்டது.

அறிவியல் வளர்ச்சியடைந்ததோடு முஸ்லிம் அறிஞர்களின் பார்வையிலும் அல்குர்ஆனின் விளக்கத்தில் மாற்றம் தென்பட ஆரம்பித்தது. உதாரணமாக ஆரம்ப காலத்தில் ‘‘அலக்’’ என்ற அரபுச் சொல்லை மொழிமாற்றம் செய்த அறிஞர்கள் இரத்தக்கட்டி என்று மொழிமாற்றம் செய்தார்கள். எனினும் அறிவியல் விஞ்ஞான உண்மைக ளுக்கு அல்குர்ஆன் என்றும் முரண்படுவதில்லை என்பதை நிரூபிப்பதற்காக ‘‘அலக்’’ என்பது கருவறைச் சுவரில் ஒட்டிக்கொண்டிருக்கும் அட்டைப்பூச்சி போன்ற ஒன்று அல்லது அலக் என்ற நிலை என விளக்கம் தந்தார்கள்.



அதேபோல் ஆரம்ப காலத்தில் விளக்கம் தந்த அறிஞர்கள் இக்கருத்தை அங்கீகரிக்கும் விதத்தில் தமது கருத் துக்களை சூசகமாக தந்துள்ளமை சுட்டிக்காட்டப்படக் கூடியதாகும்.

அல்குர்ஆனிய அறிஞர்களில் சிலர் அல்குர்ஆனில் இடம் பெறும் சட்ட வசனங்களை தனியாகப் பிரித்து விளக்க முற்பட்டதன் விளைவாக நவீன காலத்தின் இஸ்லாமிய சட்டத்திற்கு எதிராக மேற்கொள்ளப் படுகின்ற விமர்சனங் களுக்கு பதிலடி கொடுப்பதற்கு அவை உந்து சக்தியாக விளங்கியதை மறுக்க முடியாது.

அவ்வாறே இஸ்லாமிய பொருளியல், வங்கியியல், மருத்துவம், வானியல் போன்ற துறைகளுடன் தொடர்பான அல்குர்ஆனின் வசனங்களை விளக்குவதில் அறிஞர்கள் பாரிய பங்களிப்பு செய்துள்ளனர். காலத்தின் முன்னேற்றம் அறிஞர்களின் அறிவியல் பார்வையிலும் முன்னேற்றத்தை உருவாக்கியது எனச் சுருக்கமாகக் குறிப்பிட முடியும். அறிவியல் துறை சார்ந்த விளக்கங்களை உள்ளடக்கி பல தப்ஸீர்கள் வெளிவந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

எனவே, சமகால முஸ்லிம் சமூகத்தில் தப்ஸீர் கலையின் அவசியம் எந்தளவு உணரப்பட்டுள்ளது, அதன் பயன்பாடு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது போன்ற விடயங் களை இவ்வாய்வு மதிப்பீடு செய்கின்றது.

## தப்ஸீர் பதவிளக்கம்

தப்ஸீர் என்ற பதம் மொழி வழக்கில் தெளிவு, மயக்கமற்ற நிலை என்று பொருள்படும். இதனை அல்குர்ஆன் பின்வருமாறு விபரிக்கின்றது.

(நபியே!) அவர்கள் உம்மிடம் எந்த உதாரணத்தைக் கொண்டு வந்தாலும் நாம் உம்மிடம் சத்தியத்தையும், (அதைவிட) தெளிவான விளக்கத்தையும் கொண்டு வருவோம். (அல்புர்கான்:33)

மேற்படி அல்குர்ஆன் வசனத்தில் ''அஹ்ஸன தப்ஸீரா'' என்ற சொல் தெளிவான விளக்கம் என்ற பொருளில் இடம்பெற்றுள்ளதைக் கவனத்திற்கொண்டு அறிஞர்கள் தப்ஸீர் என்பது 'தெளிவான விளக்கம்' எனக் குறிப்பிடுகின்றனர்.

இப்பதத்தை விளக்கும் அகராதி அறிஞர்கள் அது பஸ்ர் என்ற சொல்லில் இருந்து பிறந்ததாகவும் அது தெளிவையும் மூடிக்கிடப்பதை அகற்றி வெளிச்சம் தரும் பொருளையும் கொண்டது என விளக்கும் அதேவேளை தப்ஸீர் துறை அறிஞர்கள் தெளிவான, விரிவான விளக்கத்தைக் கொண்டு வருவோம். அது தெளிவு, விவரணம் (சந்தேகமற்ற நிலை) போன்ற பொருளைத் தரும் பஸ்ர் எனப்படும் மூலச் சொல்லில் இருந்து பெறப்பட்டது என விளக்குகின்றனர்.

தப்ஸீர் என்ற சொல்லைக் குறிக்க 'த.்.வீல்' என்ற சொற்பிரயோகத்தை அறிஞர்கள் பிரயோகித்துள்ளனர். அரபு மொழி வழக்கில் திரும்புதல், விளக்கம் அளித்தல்,



கனவுக்கு விளக்கம் தருதல் போன்ற பொருள்களை த.்.வீல் என்ற சொல் குறிப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது. ஒரு சான்றின் நேரடியான பொருளை விட்டுவிட்டு தவறான விளக்கத்தை அளிப்பதையும் த.்.வீல் என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

அல்லாஹ்வின் வேதத்திலும் அவனது தூதரின் ஸுன்னாவிலும் த.்.வீல் என்பது ஒரு பேச்சின் யதார்த்தத்தில் தங்கி நிற்பதையும் அதில் ஏவப்பட்டுள்ளதை அப்படியே நடைமுறைப்படுத்துவதையும் குறிக்கும் என அஹ்னபி என்ற அறிஞர் சுட்டிக்காட்டுகின்றார்.

பிற்காலத்தில் வந்தவர்கள் த.்.வீல் என்ற சொல்லை தவறாக அணுகினர். அவர்கள் ஊர்ஜிதமான கருத்தில் இருந்து ஊர்ஜிதம் அற்ற பலவீனமான கருத்திற்காக அதனை உபயோகித்தனர். இது அகீதாவில் வழிதவறிய வர்களிடம் காணப்பட்ட அணுகுமுறையாக இருந்துள்ளது.

## தப்ஸீரின் அவசியம்

முஸ்லிம் சமூகம் அறிந்திருக்க வேண்டிய அறிவுகளில் குர்ஆனிய அறிவு முதல் இடத்தைப் பெறுகின்றது. குர்ஆனைப் பாதுகாப்பது அதன் பொருள்கள் பற்றி சிந்தனை செய்வது அதனை விளங்குவது, நடைமுறைப் படுத்துவது போன்ற அம்சங்களை அல்லாஹ் இந்த உம்மத்தின் மீது விதியாக்கியுள்ளான். கொள்கை சார்ந்த அம்சங்களில் வழிதவறியவர்கள் அல்குர்ஆனை அஜமிகள் பார்வையில் விளக்க முற்பட்டனர்.

'அவர்கள் இந்தக் குர்ஆனை சிந்திக்க வேண்டாமா? அது அல்லாஹ் அல்லாதவர்களிடம் இருந்து வந்திருக்குமாக இருந்தால் அதில் அவர்கள் பல முரண்பாடுகளைக் கண்டிருப்பார்கள்.' (04:82)

'இது அருள்பாக்கியமிக்க வேதம். அதன் வசனங்களை அவர்கள் சிந்திப்பதற்காகவும், சிந்தனையுள்ளோர் நல்லுப தேசம் பெறும் பொருட்டும் நாம் உம்மளவில் அதை இறக்கி வைத்துள்ளோம்.' (38:29)

'அவர்கள் இந்தக் குர்ஆனை சிந்திக்க வேண்டாமா? அல்லது அவர்களது இதயங்களில் பூட்டுக்கள் (போடப்பட்டு) இருக்கின்றனவா?' (47:24)

இவ்வாறான வசனங்கள் இறைமறையை சிந்திக்கும்படி சமுதாயத்தை அழைக்கின்றன. யாரிடம் அறிவும், ஆற்றலும், மார்க்க விளக்கமும் இருக்கின்றதோ அவர்கள் மீது இந்தப் பணி கடமையாகும்.

அல்குர்ஆன் தெளிவான அறபி மொழியில் இறங்கியிருந்தும், அது இறக்கப்பட்ட சமூகம் தெளிவான அறபு மொழி பேசும் ஆற்றல் உடையவர்களாக இருந்தும் சிலபோது அவர்களுக்கும் சில வசனங்களை விளங்குவதில் சிக்கல்கள் எழுந்ததுண்டு. அதற்கான தீர்வினை அல்லாஹ்வின் தூதரிடம் நேரடியாகச் சென்று தெளிவு பெற்றதற்கான பல சான்றுகள் காணப் படுகின்றன.

நபி (ஸல்) அவர்கள் உயிருடன் வாழ்கின்ற போது அதனைத் தெளிவுபடுத்தும் பொறுப்பு அவர்களிடம்



ஒப்படைக்கப்பட்டது. நபியே மனிதர்களுக்கு இறக்கப்பட்ட இவ்வேதத்தை நீர் அவர்களுக்கு தெளிவுபடுத்திடவும் அவர்கள் நல்லுபதேசம் பெறும் பொருட்டும் உம்மீது இவ்வேதத்தை நாம் இறக்கி வைத்தோம் என்பது அல்குர்ஆனின் கட்டளையாகும். இந்த வசனத்தின் அடிப் படையில் நபியிடம் விளக்கம் பெற்ற நபித்தோழர்கள் அதனை மனனம் செய்து தமது வாழ்வில் நடைமுறைப் படுத்தினர். பத்து வசனத்தைக் கற்றுக் கொண்டால் அவற்றை நடைமுறைப்படுத்தாது அடுத்த வசனங்களைக் கற்பதில்லை என்ற நிலைப்பாட்டில் நபித்தோழர்கள் இருந்துள்ளனர். தெளிவான அறபு மொழியைக் கொண் டிருந்த நபித்தோழர்களுக்கு அனைத்து வசனங் களையும் விளக்க வேண்டிய தேவை காணப்படவில்லை. குர்ஆனில் நேரடியாக விளங்கியதைக் கொண்டு அவர்கள் செயற்பட்டார்கள்.

அறபு மொழியை அறியாத வெவ்வேறு கலாசாரப் பின்னணியைக் கொண்ட மக்கள் இம்மார்க்கத்தை ஏற்றபோது அவர்களிடம் காணப்பட்ட குர்ஆன் பற்றிய அறியாமை குர்ஆனியக் கலையில் கூறப்படுகின்ற சகல பகுதிகளும் விரிவாகக் கூறப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் தப்ஸீரின் தேவை உணரப்பட்டது.

அல்குர்ஆனின் விளக்கத்தில் நபித்தோழர்கள் ஏற்றத்தாழ்வை உடையவர்களாக இருந்தனர். ஒருவர் மற்றவரை விட ஏற்றத்தாழ்வுடன் காணப்படுவது ஒரு சமூகத்தின் இயல்பாகும். அதில் நபித்தோழர்களும் விதிவிலக் கானவர்கள் அல்லர். இருப்பினும் அறபு மொழியாற்றல்

என்பது குர்ஆனை விளங்கிட போதுமான தகைமை அல்ல என்பதை நபித்தோழர்கள் வாழ்வில் ஏற்பட்ட குர்ஆன் பற்றிய தவறான புரிதல்கள் பற்றி வந்துள்ள பல நிகழ்வுகள் மூலம் அறிய முடிகின்றது. நபித்தோழர்கள் அனைவரும் குர்ஆனிய வல்லுனர்களாக அறிமுகப்படுத்தப்படாதிருப்பது இதனை இன்னும் உறுதி செய்கின்றது.

## தப்ஸீர் கலையின் தோற்றம்

அல்குர்ஆன் வசனங்கள் நபித்தோழர்கள் மத்தியில் ஓதிக்காண்பிக்கப்பட்ட போது அவற்றை அவர்கள் நேரடியாகவே புரிந்து கொண்டார்கள். சந்தேகங்கள் ஏற்படுமிடத்து நபியவர்களிடம் கேட்டு அதற்கு அவர்களது விளக்கத்தைக் கொண்டு சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்வார்கள். சிலபோது நாம் இந்த வசனத்தை இப்படித்தான் விளங்கினோம், நடைமுறைப் படுத்தினோம் என நபி (ஸல்) அவர்களிடம் எடுத்துக் கூறுகின்றபோது அவர்களின் தவறுதலான புரிதலை நபி (ஸல்) அவர்கள் திருத்திக் கொடுப்பார்கள் அல்லது விளக்கம் கேட்பதற்கு விளக்கம் அளிப்பார்கள். இதை ஒருவர் மற்றவரிடம் கூறி மனப்பதிவு செய்து கொள்வார்கள். பின்வரும் செய்தியை இதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம்.

தயம்மும் பற்றிய செய்தியைக் குறிப்பிடுகின்ற வசனத்தை தவறாகப் புரிந்த அம்மார் பின் யாஸிர் (றழி) என்ற நபித்தோழருக்கு தவறைத் திருத்தி இவ்வாறுதான் இதன் அமைப்பு என விளக்கியதை சான்றாகக் கொள்ள முடியும்.



தண்ணீர் இல்லாத போது தூய்மையான மண்ணை நாடுங்கள் என்ற வசனத்தை மண்ணில் புரள்வது என்று விளங்கிய அம்மார் ஒரு பிராணி மண்ணில் புரள்வது போன்று புரண்டார். அதையே அவர் தயம்மும் என்று கருதினார். இது பற்றி நபியவர்களிடம் எடுத்துக் கூறியபோது நீர் இவ்வாறு செய்வது போதும் எனக் கூறி தனது இரு கரத்தையும் மண்ணில் அடித்து பின்னர் தனது முகத்தையும் இரு மணிக்கட்டுக் கைகளையும் தடவிக் காட்டி தயம்மும் பற்றி விளக்கினார்கள். (புஹாரி) இது தவறாகப் புரியப்பட்ட ஒரு வசனத்திற்கு விளக்கம் அளித்துள்ளதை சுட்டிக் காட்டுகின்றது.

நபியவர்களின் காலத்தில் தப்ஸீர் நூல் வடிவத்தில் தொகுப்பாகக் காணப்பட வில்லையாயினும் நபித் தோழர்கள் தாம் செவிமடுத்ததையும் நபியிடமிருந்து கற்றுக் கொண்டதையும் மற்றவர்களுக்கு அறிவிக்க அதை மக்கள் மனனமிட்டுக் கொண்டனர்.

தாபியீன்களின் ஆரம்ப காலத்திலும் இவ்வாறானதொரு நடைமுறைதான் இருந்து வந்தது. ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டின் இறுதியில் உமையாக் கலீபாக்களில் ஒருவரான கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் (றஹ்) அவர்கள் தனது ஆட்சியில் விடுத்த பணிப்புரையின் பேரில் ஹதீஸ்கள் தொகுக்கப்பட்டன. அத்துடன் தப்ஸீரும் அதன் பல தரப்பட்ட விடயங்களும் ஹதீஸ்களுடன் இணைத்துத் தொகுக்கப்பட்டன. இதனை புஹாரி, முஸ்லிம், சுனன் கிரந்தங்களில் காண முடியும். இதனை தப்ஸீர் ஹதீஸ்களுடன் இணைந்து காணப்பட்ட காலம் எனக்

குறிப்பிட முடியும். இவைகள் நபி (ஸல்) அவர்களின் விளக்கங்கள், ஸஹாபாக்கள், தாபியீன்களது கூற்றுக்கள் உள்ளடங்கியதாகக் காணப்பட்டன. இத்தொகுப்புக்கள் அறிவிப்பாளர்களை இணைத்தே காணப்பட்டாலும் பின்னர் அறிவிப்பாளர்கள் வரிசைகளைச் சுருக்கி அறிவித்த காலம் தோன்றியது. இந்த நிலை ஹி 180 வரை நீடித்துள்ளது என்பதை தப்ஸீர் தொகுப்பு காலம் பற்றிய தகவல் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

### தப்ஸீர் கலையின் முக்கிய மூன்று காலங்கள்

தப்ஸீர் துறை முக்கிய மூன்று கால கட்டங்களைக் கடந்து வந்துள்ளதை அத்துறை சார்ந்த ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

### முதலாவது காலப்பகுதி

இக்காலப்பகுதி தப்ஸீர் ஹதீஸுடன் இணைந்திருந்த காலமாகும். புஹாரி, முஸ்லிம் போன்ற ஹதீஸ் கிரந்தங்களில் தப்ஸீரைத் தனியான அத்தியாயமாக இடம்பெறச் செய்துள்ளனர். இக்காலத்தில் தனியான தொகுப்புக்கள் வெளிவரவில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. இக்காலத்தில் தப்ஸீரைத் தொகுத்தளித் தவர்களாக பின்வரும் அறிஞர்கள் இடம்பெறுகின்றனர்.

01. யஸீத் பின் ஹாருன்
02. ஷுஃபத் இப்னு ஹஜ்ஜாஜ்
03. வகீஃ இப்னுல் ஜர்ராஹ்



04. ஸுப்யான் இப்னு உயைனா
05. அப்துர் ரஸ்ஸாக் இப்னு ஹம்மாம்
06. ஆதம் இப்னு அபீ இயாஸ்
07. வயீத் இப்னு ஹமீத்

### இக்கால தப்ஸீரில் காணப்பட்ட சிறப்பம்சங்கள்

01. அறிவிப்பாளர் வரிசைக்கு முன்னுரிமை அளித்தல்
02. நபி (ஸல்) அவர்களின் கூற்றுக்கள் மற்றும் நபித் தோழர்கள், தாபியீன்களின் கூற்றுக்களை ஒன்றி ணைத்தல்
03. ஹதீஸ் அத்தியாயங்களில் ஒரு அத்தியாயமாக தப்ஸீரை இடம்பெறச் செய்தல்.

### இரண்டாவது காலப்பகுதி

இக்காலப்பகுதியில் தப்ஸீர் தனியான தொகுப்பில் நூல் வடிவில் வெளிவந்தது. அப்துல் மலிக் இப்னு ஜரீஹ் என்ற அறிஞரே தப்ஸீர் தொகுப்பாக்கத்தில் முதலாவது அறிஞர் என அடையாளப்படுத்தப்படுகின்றார். அதற்குப் பின்னர்தான் பல தப்ஸீர் நூல்கள் வெளிவந்ததாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இக்காலப் பகுதியில் தனியான தொகுப்பாக தப்ஸீரை வெளியிட்டவர்களாக பின்வரும் அறிஞர்கள் இடம்பெறுகின்றனர்.

01. இப்னு மாஜா
02. இப்னு ஜரீர் அத்தபரீ
03. அபூபக்ர் அல்முன்திரி

04. இப்னு அபீ ஹாதம்
05. இப்னு ஹிப்பான்
06. அல்ஹாகிம் அந்நைஸாபூரி
07. இப்னு மர்தவைஹி

### இக்கால தப்ஸீரில் காணப்படும் சிறப்பியல்புகள்

01. அல்குர்ஆனின் அத்தியாய வசன ஒழுங்கைத் தழுவி நபி (ஸல்) அவர்கள் ஹதீஸ், நபித்தோழர்களின் தீர்ப்புக்கள், தாபியீன்களின் கூற்றுக்கள் ஆகியவை களைத் தழுவி முழு அளவிலான தப்ஸீர்கள் காணப்பட்டமை.

02. அறிவிப்பின் நம்பகத்தன்மை பின்னால் வரும் சந்ததிகளின் கைகளில் விடப்பட்ட நிலையில் அறிவிப்பாளர் தராதரம் பற்றிய விடயங்களில் கூடிய கவனம் செலுத்தாது பொதுவாக தப்ஸீருக்கான அறிவிப்பாளர் வரிசையை மாத்திரம் அந்த நூலில் பேணியமை.

03. இஸ்ராயீலிய்யாத் செய்திகளை அறிவிப்பதில் எல்லையற்ற நிலை.

04. முன்னோர்களின் கூற்றுக்களை ஒன்று திரட்டி அதனை வாதப்பிரதிவாதங்களுக்கு உட்படுத்தி ஊர்ஜிதமான கருத்திற்காக முயன்றுள்ளமை.



05. விளக்கத்தை அறிவிப்புக்களுடன் இணைத்து விளக்க முற்படுதல். முபஸ்ஸிரீன்களின் திறமை இஜ்திஹாத் எனப்படும் முயற்சி வெளிப்படுதல் போன்ற அம்சங்கள். இது இப்னு ஜரீர் அத்தபரி (றஹ்) அவர்களின் நூலில் பேணப்பட்டி ருக்கின்றது.

### மூன்றாவது காலப்பகுதி

அறிவிப்பாளர் வரிசையைச் சுருக்கி தப்ஸீரை விரிவாக்கம் செய்தல். இக்காலகட்டம் பற்றி வர்ணிக்கின்ற அறிஞர்கள் அறிவிப்பாளர் வரிசைச் சுருக்கமும் தப்ஸீர் துறையில் விரிவான விளக்கமும் இடம்பெற்ற காலகட்டமும் தனியான தப்ஸீர் தொகுப்புக்கள் வெளிவந்த காலமுமாகும் எனக் குறிப்பிடுகின்றனர். இக்காலப்பகுதியில் பேணப்பட்ட முறை இன்று வரை நிலைத்துக் காணப்படுகின்றது. இக்கால தப்ஸீர்கள் பல வடிவங்களைக் கொண்டதாக காணப்படுகின்றன.

### இக்கால தப்ஸீரில் காணப்படும் சாதக பாதகங்கள்

01. அறிவிப்பாளர் வரிசைகளைச் சுருக்கி, கூற்றுக் குரியவர்களை நீக்கினர். இதனால் ஸஹீஹ், ழயீப் (பலவீனம்) இரண்டும் ஒன்றுடன் ஒன்று கலந்து காணப்படும் நிலை உருவானது. பலவீனமான, இட்டுக்கட்டப்பட்ட செய்திகளைக் கொண்டு அதிக தப்ஸீர்கள் எழுதப்பட்டன.

02. அங்கீகரிக்க முடியுமான, புறம் தள்ள வேண்டிய கருத்துக்கள் இடம்பெற்றமை. இதனால் சான்றுகளைக் கொண்டு வழிதவறியோர் மற்றும் சிந்தனைப் பிரிவுகள் என அடையாளப்படுத்தப்படும் மு.ஃ.தஸிலா, ராபிழா (ஷீஆ), அஷ்அரிய்யா போன்ற பிரிவுகள் தமது கொள்கைக்கு இசைவாக வசனங்களின் விளக் கங்களை மாற்றி அமைத்து மக்களை வழிகெடுக்கும் நிலை உருவானது. இந்தப் போக்கை ஷமக்ஷரி தனது கஷ்ஷாப் என்ற தப்ஸீரில் கடைப்பிடித்துள்ளார்.

03. எவ்வித பயனையும் தேடித்தராத தவறான இஸ்ராயீலிய்யாத் செய்திகளில் மக்கள் அதிகளவு ஆர்வம் காட்டியமை. இதனால் அடிப்படையான மார்க்க அம்சங்களை விட்டு விட்டு தேவையற்ற விடயங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர்.

04. அறிஞர்களின் துறைசார் ஈடுபாட்டுக்கு ஏற்ப தப்ஸீர்கள் எழுதப்பட்டமை. ஒரு முபஸ்ஸிர் பிக்ஹு துறையில் அறிவுடையவராக இருப்பின் அவர் சட்டங்கள் சார்ந்த அம்சங்களில் அதிக கவனத்தை செலுத்துபவராக இருந்தார். உதாரணமாக இப்னுல் அறபி அல்மாலிகி, குர்துபி, அல்ஜஸ்ஸாஸ் போன்ற அறிஞர்களின் நூல்களைக் குறிப்பிட முடியும். அவைகள் சட்டங்கள் சார்ந்தவையாகவே பெரும்பாலும் காணப்படுகின்றன.

05. ஒருவர் இலக்கணம் பற்றிய அறிவில் ஆழ்ந்த புலமை உள்ளவராக இருப்பின் அவர் இலக்கணத்தை முன்னி லைப்படுத்தியுள்ளார். சிலபோது அதிகம் பின்பற்றப்பட்டு வந்த ஓதல் முறையை தனது இலக்கண முறைக்கு தவறாக இருப்பதாகக் கூறி நீக்கும் நிலையும் இவர்களிடம் காணப்பட்டுள்ளது. உதாரணமாக ஸஜ்ஜாஜ், அல்வாஹிதி, அபூஹய்யான் போன்றோ ரையும் தத்துவவியலாளர்களின் கருத்துக் களால் தனது தப்ஸீரை நிரப்பி வைத்துள்ள பகுத்தறிவு வாதியான பஹ்ருத்தீன் அர்ராஸி, இலக்கி யத்துறையில் பிரபல்யமான ஷமக்ஷரி போன்ற அறிஞர்களை சுட்டிக் காட்ட முடியும். இவர்களில் சரித்திரங்கள் கிஸ்ஸா கப்ஸாக்களை மாத்திரம் பதிவு செய்வோரும் இருந்தனர். உதாரணமாக தஹ்லபி, இவர் புனைந்துரைக்கப்பட்ட பொய்யான கிஸ்ஸாக் களைக் கொண்டு தனது நூலை தொகுத்துள்ளார் என்பதே ஆய்வாளர்களின் முடிவாகும்.

06. ஒரு வசனத்திற்கு பல விளக்கங்கள்

## தப்ஸீரின் மூலாதாரங்கள்

அல்குர்ஆனுக்கு விளக்கம் தர முற்படும் முபஸ்ஸிர் பின்வரும் அடிப்படைகளைத் தழுவி குர்ஆனுக்கான விளக்கத்தை பின்வரும் மூலாதாரங்கள் மூலம் தப்ஸீர் செய்வது கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது.

01. அல்குர்ஆன்
02. அஸ்ஸுன்னா
03. நபித்தோழர்களின் தீர்ப்புக்கள்
04. தாபியீன்கள், தபவுத்தாபியீன்களின் தீர்ப்புக்கள்

05. மொழியறிவு

06. இஜ்திஹாத் ஆய்வின் அடிப்படையிலான முடிவு

இவைகள் அனைத்தும் தப்ஸீர் துறையின் முதன்மை மூலாதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன.

தப்ஸீர் செய்ய முற்படும் முபஸ்ஸிர்கள் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, நபித்தோழர்களின் தீர்ப்புக்கள், தாபியீனகள், தபஉத்தாபியீன்களின் தீர்ப்புக்கள் ஆகிய நான்கு அடிப்படைகளைப் பின்பற்றுவதன் அவசியத்தை இமாம் இப்னு தைமிய்யா (றஹ்) அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். மேற்படி வழிமுறைகளை தப்ஸீரின் வழிமுறைகள் என இமாம் அவர்களால் அழைக்கப்படுகின்றது.

அதேவேளை இமாம் பத்ருத்தீன் அஸ்ஸர்கஷி அவர்கள் அல்குர்ஆனிய விளக்கத்தில்

01. நபிகள் நாயகத்தின் சொல், செயல், அங்கீகாரம் அடங்கிய அஸ்ஸுன்னா
02. நபித்தோழர்களின் தீர்ப்புக்கள்
03. அரபு மொழி
04. சொற்பிரயோகம் அல்லது பேச்சின் பொருள் வேண்டி நிற்கும் பொருள் மூலமும் மார்க்கத்தின் வலுவின் மூலமும் பெறப்படும் விளக்கத்தினையும் அடிப்படையாகக் கொண்டு அமையப் பெறும் தப்ஸீர் என்று வகைப்படுத் துகிறார்கள்.



## அல்குர்ஆனுக்கு அல்குர்ஆனைக் கொண்டு விளக்குதல்

அல்குர்ஆன் மூலம் அல்குர்ஆனை விளக்குவது தப்ஸீர் துறையில் முதல் நிலை மூலாதாரமாகக் கொள்ளப் படுகின்றது. அல்குர்ஆனில் ஒரு வசனத்தின் பொருள் ஓரிடத்தில் சுருக்கமாகவும் மற்றொரு இடத்தில் தெளிவாகவும் கூறப்பட்டிருப்பது பெரும் சிறப்பாகும். இந்நிலையில் வேறு மூலாதாரங்களை அணுகாமல் அல்குர்ஆன் வசனத்தின் மூலமே விளக்குவது மிகப் பொருத்தமானதாகும். இது தப்ஸீர்களில் மிகவும் ஆழமானது என தப்ஸீர் கலை அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

## அல்குர்ஆனுக்கு ஸுன்னாவைக் கொண்டு விளக்குதல்

ஸுன்னா இஸ்லாமிய ஷரீஆவின் இரண்டாவது மூலாதாரமாகும். அது அல்குர்ஆனை விளங்குவதற்கும் விளக்குவதற்கும் பாரிய பங்களிப்பினை கொண்டிருக் கின்றது. ''நபியே மக்களுக்காக இறக்கப்பட்ட இவ்வே தத்தை நீர் மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காகவே நாம் உம்மீது இறக்கி வைத்தோம்'' (16:44)

### நபித்தோழர்களின் மூலம் பெறப்படும் தப்ஸீர்

நபி (ஸல்) அவர்களுடன் வாழ்ந்த நபித்தோழர்கள் அல்குர் ஆனிய அறிவில் சிறந்த சிந்தனையாளர்களாக அக்கால நூற்றாண்டில் விளங்கினார்கள். அவர்களைப் பற்றி அனஸ் பின் மாலிக் (றழி) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.

"நீங்கள் உண்மைப்படுத்திட அதிகம் தகுதி பெற்றவர்கள் நபியின் தோழர்கள்தாம். அவர்களை த்தான் அல்லாஹ் நபியின் தோழமைக் காகவும், அவனது மார்க்கத்தை நிலைநாட்டிடவும் தேர்வு செய்தான்" எனக் குறிப்பிடுகின்றார்.

நபித்தோழர்கள் பற்றிக் குறிப்பிடும் இமாம் இப்னுல் கையிம் அவர்கள் "நபித்தோழர்கள் அல்லாஹ்வின் வேதமான குர்ஆன் பற்றி அதிகம் அறிந்தவர்கள், அவர்களின் விளக்கத்தின் பக்கம் மீள்வது அவசியமாகும் எனக்குறிப்பி டுகின்றார்கள்.

### நபித்தோழர்களின் தப்ஸீர் முக்கியத்துவம் பெறுவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள்

01. வஹி அருளப்பட்ட சூழலில் வாழ்ந்து அதன் நிலைகள் பற்றி நன்கு அறிந்தவர்கள்
02. வஹி பற்றிய நிகழ்வுகளை நேரடியாகக் கண்டவர்கள். அதனால் பிறர் அறியாத பல விடயங்களை அறிந்து வைத்திருந்ததுடன் குர்ஆன், ஸுன்னாவின் சட்டவாக்கத்தில் ஆழ்ந்த புலமையுடையவர்களாகவும்



காணப்பட்டார்கள். இவர்களினால் வரும் தப்ஸீர்கள் விளக்கங்கள், முரண்பாடுகள் அற்றவையாக இருப்பின் அவை முழுமையாக அங்கீகரிக்கப்பட்டன. அதே வேளை கருத்து முரண்பாடுகளைக் கொண்டிருப்பின் அவை இஜ்திஹாதில் ஒன்றாகக் கொள்ளப்பட்டு ஏற்புடையவை என அங்கீகாரம் பெற்றன.
03. வரலாற்றுப் பின்னணியை விளங்குதல்
04. மொழி அடிப்படையிலான விளக்கம் அளித்தல். அரபு மொழியில் சிறந்த ஆளுமையும் புலமையும் பெற்றவர்களாக அவர்கள் விளங்குவதே இதற்குக் காரணம்.

### தப்ஸீர் செய்வதில் ஸஹாபாக்களிடம் காணப் பட்ட உத்திகள்

நபித்தோழர்கள் தமக்குக் கிடைத்த விளக்கத்தின் அடிப்படையில் அல்குர்ஆனுக்கு விளக்கம் கொடுத்தனர். அவற்றில் மார்க்கத்திற்கு உடன்பட்டவைகளாகக் காணப் பட்டவை அங்கீகரிக்கப்பட்டன. அவர்களிடம் பின்வரும் அம்சங்கள் விளக்கக் கருவிகளாகக் காணப் பட்டன.

01. மொழியின் அமைப்பும் அதன் இரகசியமும் பற்றிய அறிவு
02. அரேபிய மக்களின் மரபுகளை அறிந்திருத்தல்
03. குர்ஆன் இறங்கிய போது அரபுப் பிரதேசத்தில் வாழ்ந்த ஏனைய மக்களின் நிலைகள் பற்றி அறிந்திருத்தல்
04. விளக்க சக்தியும் அறிவின் விசாலமும்

## நபித்தோழர்களான முபஸ்ஸிரீன்கள்

01. நான்கு கலீபாக்கள்
02. இப்னு மஸ்ஊத் (றழி)
03. இப்னு அப்பாஸ் (றழி)
04. உபை இப்னு க.்.ப் (றழி)
05. முஆத் இப்னு ஜபல் (றழி)
06. ஸாலிம் மவ்லா ஹுதைபா (றழி)
07. ஸைத் பின் தாபித் (றழி)
08. அபூமூஸா அல்அஷ்அரிய்யி (றழி)
09. அப்துல்லாஹ் இப்னு சுபைர் (றழி)

இவர்கள் அல்லாத இன்னும் பலரும் கூறப்படுகின்றனர். அவர்களில் அனஸ் பின் மாலிக் (றழி), அபூஹுறைறா (றழி), இப்னு உமர் (றழி), ஜாபிர் பின் அப்தில்லாஹ் (றழி), அப்துல்லாஹ் இப்னு அம்ர் பின் ஆஸ் (றழி), ஆயிஷா (றழி) போன்றவர்கள் முக்கியமானவர்கள். இருந்தாலும் அவர்கள் மூலம் குறைவான அறிவுப்புக்களே இடம்பெற் றுள்ளன. நான்கு கலீபாக்களில் முதல் மூவர் மூலமான தப்ஸீர்கள் மிகக் குறைவாகவே அறிவிக்கப் பட்டுள்ளது என்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

## தப்ஸீரின் பிரதான வகைகள்

தப்ஸீர் சட்டவாக்கத்தின் அடிப்படையில் இரண்டு வகைப் படும்.



01. அத்தப்ஸீர் பில் ம.்.தூர் (ஆதாரத்தின் அடிப்படையில் அமைந்தவை)
02. அத்தப்ஸீர் பிர்ர.்.யி (சிந்தனையின் அடிப்படையில் அமைந்தவை)

தப்ஸீர் ஆசிரியர்கள் தமது தப்ஸீர்களில் கடைப்பிடித்த அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டும், அவைகளில் காணப்படும் பெரும்பாலான கருத்துக்களை கவனத்தில் கொண்டும் தப்ஸீர் பிரிவின் வகைகளை பின்வரும் அடிப்படையில் வகுக்க முடியும்.

01. பிக்ஹு சட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கும் தப்ஸீர்கள்
02. இலக்கியத்துறைக்கு முன்னுரிமை வழங்கும் தப்ஸீர்கள்
03. அல்இ.்.ராப் (குறியீட்டு, இலக்கிய) பகுதிக்கு முன்னுரிமை வழங்கும் தப்ஸீர்கள்
04. அறிவியல் சார்ந்த பகுதிக்கு முன்னுரிமை வழங்கும் தப்ஸீர்கள்
05. (இஷாரி) உள்ளெழுந்த வாரியான பகுதிக்கு முன்னுரிமை வழங்கும் தப்ஸீர்கள்
06. சமூகவியல் ஒழுக்கவியல் துறைக்கு முன்னுரிமை வழங்கும் தப்ஸீர்கள்

## அத்தப்ஸீர் பில் ம.்.தூர்

அல்குர்ஆனிய வசனங்களை விளக்குவதில் ஆதாரபூர் வமான செய்திகள் மீது மாத்திரமே தங்கியிருத்தல். எந்த

ஒரு வசனத்தை விளக்குவதாக இருப்பினும் அதனை குர்ஆன் விளக்க வழிமுறைகளைக் கொண்டு ஆதாரத்துடன் விளக்குதல். இதில் ஆதாரமின்றிய விளக்கத்திற்கு எவ்வித முக்கியத்துவமும் வழங்கப்ப டமாட்டாது. இதற்கே ''தப்ஸீர் பில் ம.்.தூர்'' எனப்படும்.

### தப்ஸீர் பிர்ர.்.யி

அல்குர்ஆனை விளக்கும் முபஸ்ஸிர் தனது சொந்த விளக்கத்திலும் வரவேற்கப்படமுடியுமான அபிப்பிராயத்திலும் தனது விளக்கத்தை வழங்குவது தப்ஸீர் பிர்ர.்.யி எனப்படும்.

தப்ஸீர் பிர்ர.்.யி மூலம் பெறப்படும் விளக்கத்தை ஒரு பிரிவினர் ஆதரிக்கின்ற அதேநேரம் மற்றொரு பிரிவினர் அது இஸ்லாத்திற்கு முரணானது என்று வாதிடுகின்றனர். இதனை ஆதரிப்போர் முபஸ்ஸிர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய நிபந்தனைகள் பூரணம் பெற்ற நிலையில் விளக்கம் கூறுவதை வலியுறுத்துகின்றனர். இத்தப்ஸீர் முறையை மறுப்போர் ஒரு முபஸ்ஸிரிடம் காணப்பட வேண்டிய நிபந்தனைகள் முழுமை பெறாத நிலையில் ஆதாரமற்ற செய்திகளைக் கொண்டு அல்குர்ஆனுக்கு விளக்கமளிப் பதையே மறுக்கின்றனர் எனக் கொள்ளலாம்.



## நவீன காலத்தில் தப்ஸீர்களுக்கான ஆலோசனைகள்

மனித வாழ்வின் இலட்சியத்தை விளக்கும் அல்குர்ஆன் உலகப் பொதுமறை என்பதால் அது நவீன கால சவால் களுக்குத் தீர்வுகளை முன்வைப்பதாக அமைய வேண்டும். அத்தகைய தீர்வுகளை முன்வைக்க வேண்டிய பொறுப்பு நவீன தப்ஸீர்களின் மீது சுமத்தப்படுகின்றன. அந்தவகையில் நவீன தப்ஸீர்கள் பின்வரும் வழிமுறை களை உள்ளடக்கி இருப்பது அவசியமாகும்.

01. அறிவியல் உண்மைகளை உள்ளடக்கியதாக அமைதல்
    அல்குர்ஆன் அறிவியலை ஆர்வமூட்டி, ஆய்வைத் தூண்டுகின்ற மார்க்கம் என்பதனால் அதில் காணப்படும் அறிவியல் உண்மைகள், வழிகாட் டல்கள் ஒன்று சேர்க்கப்பட்டு நவீன அறிவியல் கண்டுபிடிப்புக்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டு முன்வை க்கப்படும் போது நவீன கால அறிவியலுடன் இயைந்து செல்லக்கூடிய ஒன்றாக அல்குர்ஆனை அறிமுகப்படுத்தலாம்.

02. நவீன காலத்துடன் தொடர்பான சமூகவியல் பிரச்சினைகளை அறிவியல் ரீதியாக முன்வைத்தல்
    தற்காலத்தில் இஸ்லாத்திற்கெதிராக முன்வைக் கப்பட்டுள்ள அதன் சட்டவாக்கம், குற்றவியல் சட்டங்கள், இறையியல், மறுமை நம்பிக்கை, பொருளியல், வட்டி போன்ற அம்சங்களை விளக்

குவதாக அமைதல். அத்தோடு இஸ்லாமிய ஆடை முறை மற்றும் வாழ்வியல் ஒழுக்கம் தொடர்பான அம்சங்களில் சமூக சீரழிவை ஏற்படுத்தும் காரணிகளை விளக்கி அதற்கான தீர்வுகளை அல்குர்ஆனின் ஒளியில் முன்வைத்தல்

**முடிவுரை**

அல்குர்ஆன் அருளப்பட்ட காலம் முதல் அதனை விளக்கும் பணிகள் காலத்திற்கு ஏற்ப அர்த்தமுள்ளதாக நடைபெற்ற வந்துள்ளன. அது நபி (ஸல்) அவர்கள் மீது இறங்கிய போது மனனம், விளங்குதல், சந்தேகங்களை கேட்டறிதல், முரண்பாடுகள் போன்று தெரிவதை விளக்குதல் போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. அதேவேளை அல்குர்ஆனுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிப்பதன் மூலம் முஸ்லிம் களுக்குத் தெளிவையும், விமர்சகர் களுக்கான பதிலையும் அளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

குர்ஆனின் நம்பகத்தன்மையை நிரூபிப்பதில் குர்ஆனில் இடம்பெறும் அறிவியல் உண்மைகள் ஒன்று திரட்டப்பட்டு அறிவுக்குப் பொருத்தமான முறையில் முன்வைக்கப் படுகின்ற போது அதன் யதார்த்தமும் பெறுமதியும் உணர்த்தப்படும். அந்தக் குறை பல அறிஞர்களால் நிவர்த்தி செய்யப்பட்டிருப்பினும் அதன் பரவலாக்கல் விடயத்தில் முஸ்லிம்களிடம் கவனக் குறைவு இன்றும் இருக்கவே செய்கின்றது. அவை நீக்கப்படுமானால்



நிச்சயமாக அதற்கு எதிராக முன்வைக்கப்படும் விமர்சனங் களைத் தவிர்க்கலாம்.

பல்வேறுபட்ட போக்கினைக் கொண்டதாகக் காணப்படும் தப்ஸீர் நூல்கள் ஒழுங்குபடுத்தப்படவேண்டிய தேவை அவசியமாகின்றது. இதனைக் கவனத்திற் கொண்டு ஒவ்வொரு அறிஞரும் அவரது தப்ஸீரில் கடைப்பிடித்துள்ள வழிமுறை, அவர் எந்த சிந்தனையைப் பிரதிபலிப்பவராக இருந்தார் போன்ற அம்சங்கள் பற்றி விளக்குவது அவசியமானது. அத்துடன் ஒருவர் தப்ஸீர் செய்வது எப்படி? அதன் அளவுகோள் என்ன? என்பன போன்ற அடிப்படை விதிகளை விளக்குவதும் தேவையாக இருக்கின்றது. அத்துடன் அறிவியல் துறையுடன் இணைந்ததாக நவீன காலத்தில் எழுதப்பட்டுள்ள தப்ஸீர்கள் உலகியல் சிந்தனைகளைச் சரிகாண வேண்டும், உலக மாற்றத்துடன் இஸ்லாமிய சிந்தனையும் மாற்றம் பெற வேண்டும் என்ற சிந்தனைப் பாங்கில் இருந்து விடுதலை பெற்றிருப்பதும் அவசியமாகும்.

எனவே, இவ்வாய்வு சமகால முஸ்லிம் சமூகத்தில் தப்ஸீர் கலையின் அவசியம், அதன் பயன்பாடு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை மதிப்பீடு செய்து ள்ளதோடு, எதிர்காலத்தில் எழுதப்படும் தப்ஸீர்கள் நவீன காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக, நவீன சவால்களை முறியடிக்கக்கூடியதாக எவ்வாறு அமைய வேண்டும் என்ற விடயங்களையும் முன்வைத்துள்ளது.

## உசாத்துணை


1. Abdul Kalam Azad, 1996, “The Tarjuman AL quran”Vol I, New Delhi.
2. அக்ரம் எம்.எம்.எம், 2010, அல்குர்ஆன் விரிவுரைக் கலையின் முன்னோடி இமாம் இப்னு கஸீர்(ரஹ்), கொழும்பு -09.
3. கஸீர், இஸ்மாயீல் (2003), தப்ஸீர் இப்னு கஸீர், (மொ.பெ), சென்னை, றஹ்மத் பதிப்பகம்.
4. மன்னாஉல் கத்தான், (1997), மபாஹிஸ் பீ உலூமில் குர்ஆன், முஅஸ்ஸஸதுர் றிஸாலா, பேய்ருத், லெபனான்.
5. பீர் முஹம்மத் ஏ.எல், *(2000)* “அல்குர்ஆன் ஓர் அறிமுகம்”˙.சுஹா பப்ளிகேஷன், *வாழைச்சேனை*
6. புகாரி, இஸ்மாயீல். (1999), ஸஹீஹுல் புகாரி, (மொ.பெ), சென்னை, றஹ்மத் பதிப்பகம்.
7. ஜைனுல் ஆபிதீன் பி. (2002), திருக்குர்ஆன்: குர்ஆன் அறிமுகம், மூலம், தமிழாக்கம், விளக்கம், அட்டவணை, மூன் பப்ளிஷர்ஸ், சென்னை




# جهود علماء المسلمين فى ترجمة الأدب العربي إلى اللغة التاملية : بحث مركز لبعض الشخصيات البارزة من علماء الهند وسريلانكا

The efforts of Muslim scholars in the translation of Arabic literature into the Tamil language: a research based on some eminent figures from India and Sri Lanka


[31] Mohamed Thamby Habeebullah, [32] Dr.Pichchai Mohideen Hamthoon [33] Dr. Abdur Razak Nasar
Email: habeebullah@seu.ac.lk


**ملخص البحث** :


إن الأدب العربي له دور فعال في تأثير الآداب الغربية والشرقية منذ فجر الإسلام المبكر وقبله إلى عصرنا الحديث. كما أن هناك بعض المصطلحات والعبارات الأدبية العربية قد اشتهر استخدامها فى الدراسات والكتب والمراجع الأساسية فى عادات المجتمعات فى الهند



[31] Senior Lecturer, Department of Arabic Language, Faculty of Islamic Studies and Arabic Language South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka

[32] Senior Lecturer Department of Arabic, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka

[33] Senior Lecturer, Department of Arabic Language, Faculty of Islamic Studies and Arabic Language South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka